வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்,
ந.க.எண்.979/அ1/2023 நாள் :28.04.2023

பொருள் பள்ளிக் கல்வி – வேலூர் மாவட்டம் – தமிழ்நாடு அமைச்சுப் பணி – உதவியாளர்கள் பதவியிலிருந்து பதவி உயர்த்தப்பட்ட கண்காணிப்பாளர் பதவி உயர்வுக்கு 15.03.2023 அன்று உள்ளவாறு தகுதியுடைய உதவியாளர்களின் உத்தேச தேர்ந்தோர் பெயர் பட்டியல் – வெளியிடுதல் – தொடர்பாக.

பார்வை தமிழ்நாடு பள்ளிக் கல்வி ஆணையரக இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள் ந.க.எண்.10030/அ3/இ1/2023 நாள்.26.04.2023

-----

பார்வையில் காணும் செயல்முறைகளில் உதவியாளர்கள் பதவியிலிருந்து பதவி உயர்த்தப்பட்ட கண்காணிப்பாளர் பதவிக்கு தகுதிவாய்ந்த உதவியாளர்களின் உத்தேச தேர்ந்தெடுத்தோர் பெயர்பட்டியல் (15.03.2002 முதல் 15.03.2012 முடிய இளநிலை உதவியாளர் தேர்ந்தெடுத்தோர் பட்டியலில் இடம் பெற்று உதவியாளராக பதவி உயர்வு பெற்று பணியில் சேர்ந்தவர்கள் சார்பாக) 15.03.2023 அன்று உள்ளவாறு உத்தேசமாகத் தயார் செய்யப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது. இப்பெயர்ப்பட்டியலை அனைத்து பணியாளர்களும் சரிபார்த்து ஒப்புதல் பெற்று அவற்றில் சேர்க்கை / திருத்தம் / நீக்கம் ஏதேனுமிருப்பின் அதன் விவரத்தினை தெரிவிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே இப்பெயர்ப்பட்டியலில் உள்ள பணியாளர்கள் தங்கள் சார்பான விவரங்களை சரிபார்த்து ஒப்புதல் பெற்று அவற்றில் சேர்க்கை / திருத்தம் / நீக்கம் ஏதேனுமிருப்பின் அதன் விவரம் மற்றும் இப்பணியாளர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை தண்டணைக் காலம் நிலுவையில் உள்ளவர்கள், மாறுதலில் சென்றவர்கள், தகவலின்றி நீண்ட கால விடுப்பில் உள்ளவர்கள், ஓய்வு மற்றும் விடுப்பு ஓய்வு பெற்றவர்கள், மற்றும் பதவி உயர்வினை தற்காலிக / நிரந்தர உரிமைவிடல் செய்தவர்கள் எவரேனுமிருப்பின் அதன் விவரத்தினை 05.05.2023 அன்று மாலை 04.00 மணிக்குள் இவ்வலுவலகத்தில் ஒப்படைக்குமாறு ஆய்வு அலுவலர்கள் மற்று தலைமை ஆசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

மேலும் மேற்கண்ட சேர்க்கை நீக்கம் மற்றும் திருத்தம் மேற்கொள்ளப்பட்ட பின்னர் அத்தேர்ந்தோர் பெயர் பட்டியலின் அடிப்படையில் பதவி உயர்வு அளிக்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர் – 9.

28/4/2023

பெறுநர்
1. மாவட்டக் கல்வி அலுவலர்கள்,
(இடைநிலைக்கல்வி / தொடக்கக்கல்வி / தனியார் பள்ளிகள்)
வேலூர் மாவட்டம்.

2. அரசு நகராட்சி / மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள் , வே.மா.,

ப.ரா.,